**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1507/2022 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முருகேசன் | த–பெ | சுப்பையா |
| ஊர்: | : | பழைய ஆத்தங்குடி | | |
| வயது: | : | 52/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலி வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026**
**எதிரி ஆஜர்.**

----------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் பழைய ஆத்தங்குடியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். 13.02.2022 அன்று நான் எனது மகன் குருதர்சன் என்பவரை XL இருசக்கர வாகனத்தில் வீட்டில் இருந்து அழைத்து கொண்டு ஆத்தங்குடிக்கு காலை 11.00 மணியளவில் கிளம்பினோம். பழைய ஆத்தங்குடியில் இருந்து ஆத்தங்குடிக்கு சம்பவ சாலையில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருக்கும் போது தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்த TATA ACE வாகனம் ஒன்று வேகமாக வந்தது. நான் அதை பார்த்து கத்தினேன். பின்னால் மகன் இருக்கிறான் என்று மணி மணி என்று அந்த ஓட்டுநரை பார்த்து சொன்னேன். மேற்படி ஆஜர் எதிரி தான் அந்த TATA ACE வாகனத்தை வேகமாக ஓட்டி வந்த நபர். அந்த நபர் நான் சொல்வதை கேட்காமல் எனது வாகனத்தின் மீது வந்து மோதி விட்டார். பிறகு என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு உச்சந்தலை, வலது கால், நெற்றி பகுதி, இடது தோல் பட்டை ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டது மயக்க நிலைக்கு சென்று விட்டேன். எனது மகன் குருதர்சனுக்கு காயங்கள் ஏற்பட்டதாக பின்னால் கேட்டு தெரிந்து கொண்டேன். நான் சிகிச்சைக்காக காரைக்குடி ஆதித்யா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். எனது மகன் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டதாக தெரிந்து கொண்டேன். நான் பேச இயலாத நிலையில் இருந்ததால் யார் புகார் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**குறுக்கு விசாரணை**

எனக்கு இருக்கர வாகனம் ஓட்டும் உரிமம் இருக்கா என்றால் இருக்கு. எனது வாகனம் எப்போது வாகன விபத்து ஆய்வாளரிடம் ஆய்வு செய்வதற்கு நான் கொண்டு செல்லவில்லை என்றால் சரிதான். யார் கொண்டு சென்றார்கள் என்று தெரியாது. நான்

எத்தனை நாள் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் 3 மாதம். 3 மாதமும் ஆதித்தியா மருத்துவமனையில் தான் இருந்தேன் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட நாள் அன்று என்னை திருமயம் மருத்துவமனையில் சேர்த்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பின்னர் புதுக்கோட்டை அரது மருத்துவமனைக்கு அழைத்து சென்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். திருமயத்திற்கும் , புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது. நான் வாகனத்தை ஓட்டி சென்ற போது எனது மகன் வாகனத்தின் முன் பகுதியில் இருந்தாரா அல்லது பின் பகுதியில் இருந்தாரா என்றால் முன் பகுதி. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் ஒரு வலைவான பகுதி என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் அன்று நான் வாகனத்தை மது போதையில் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் எனக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. விபத்து நடந்ததாக சொல்லும் தேதி 13.03.2022, அன்று முதல் மே 2022 மாதம் வரை நான் மருத்துவமனையில் தான் இருந்தேன். என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற இடம் பேருந்து நிருத்தும இடம் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் பேருந்து நிருத்ததில் வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் வலைவான சாலை நான் மது போதையில் வாகனம் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தி விட்டு தற்போது எதிரி மீது பலி போடுகிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த விபத்தை வழியே ஏற்படுத்தியதினால் இருசக்கர வாகனம் மோதி தான் விபத்து ஏற்பட்டது ஆனால் போலீசார் 4 சக்கர வாகனம் மீது வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். நான் மது அருந்தி தான் விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. இறந்த எனது மகன் வயது 7 வயது ஆகும். 7 வயது மகனுக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு டிரைவிங் கற்றுக்கொடுப்பதற்காக வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. எனக்கு வாகனம் ஓட்டுவதற்கு எந்தவித தகுதியும் இல்லை என்றால் சரியல்ல. நான் தான் கவனக்குறைவாக இருசக்கர வாகனத்தை ஓட்டி நான்கு சக்கர வாகனத்தி மீது மோதி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.10 17:43:10 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1507/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராஜலெட்சுமி | க–பெ | முருகேசன் |
| ஊர்: | : | பழைய ஆத்தங்குடி | | |
| வயது: | : | 45/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலிவேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் பழைய ஆத்தங்குடியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். 13.02.2022 அன்று எனது கணவர் முருகேசனுடன் எனதுமகன் குருதர்சன் என்பவரும் எங்களுக்கு சொந்தமான XL இருசக்கர வாகனத்தில் காலை 11.00 மணிக்கு வீட்டில் இருந்து கிளம்பி ஆத்தங்குடிக்கு சென்றார்கள். பின்னர் சற்று நேரத்தில் எனக்கு தெரிந்த நபர் ராசு என்பவர் என்னிடம் செல் போனில் தொடர்பு கொண்டு எனது கணவர் மற்றும் மகன் சென்ற இருசக்கர வாகனம் சம்பவ சாலையில் TATA ACE ஒன்று அவர்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக சொன்னார்கள் அதன் அடிப்படையில் காயம்பட்ட அவர்களை மருத்துவமனையில் சிகிச்சையில் வைத்திருப்பதாக சொன்னார்கள். சம்பவம் கேள்விப்பட்டு அங்கு சென்று பார்த்த போது எனது கணவர் மயக்க நிலையில் இருந்தார். எனது மகன் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டார். மேற்படி சம்பவம் குறித்து என்னிடம் போலீசார் விசாரணை செய்தார்கள். அவர்களிடம் கேள்விப்பட்ட விவரங்களை நான் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.10 17:43:15 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.